**சியம்பலாண்டுவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சியம்பலாண்டுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சியம்பலாண்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொடியாகல நூலகம் அமைந்துள்ள காணி ரூபா 2,000,000 இற்கு தற்காலிக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அது ரூபா 200,000 என நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தால் காணி மற்றும் கட்டிடங்களின் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு பங்களிப்புக் கணக்கு ரூபா 1,800,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குமாறு விடயப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) பெற வேண்டிய வாராந்த சந்தைக் கட்டணங்கள் ஆரம்ப மீதி ரூபா 418,831 குறைத்து பதிவு செய்யப்பட்டதால் நிலுவை வாரச் சந்தைக் கட்டணம் மற்றும் திரண்ட நிதியம் இப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | நிலுவை வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டின் பெற வேண்டிய ரூபா 656,981 ஆன முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்படாமையால் செயற்பாட்டு மிகை மற்றும் பெற வேண்டியவைகள் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | பெறவேண்டிய முத்திரை வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பிரதேச சபைக்குரிய 04 நூலகங்களுக்கு விலைகள் குறிப்பிடப்படாத 2114 புத்தகங்களின் பெறுமதி இனங்காணப்படாமல் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குமாறு விடயப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நூலகப் புத்தகங்களின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 56 வகைகளுக்குரிய ரூபா 138,693 பெறுமதியான 181 பாவனைப் பொருள் அலகுகள் அலுவலக உபகரணங்களாக கணக்கிடப் பட்டிருந்தமையால் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கு அப்பெறுமதியினால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | சொத்துக்கள் சரியாக வகைப் படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் ஊழியர் கடன் ரூபா 478,931 குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | பெறவேண்டிய ஊழியர் கடன் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அண்மித்த அறிக்கைகளுடன் ஒப்பிடும் போது செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 53,881 தொகை மற்றும் நிலுவையான வாரச் சந்தைக் கட்டணங்களில் ரூபா 409,829 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது | சீராக்கப்பட்டு பதிவேடுகள் சீராக பேணிச் செல்வதாகவும் 2022 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் வேறுபாடுகளைச் சரி செய்யப்பட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் சரியாக றாளதுவரையாக்கி இணக்கமிண்மைகளுக்கு காரணங்களைக் கண்டுபிடித்து சீராக்கப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,811,711 ஆக இருந்ததுடன் அதனோடொத்த எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,386,255 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுபைக்குச் சொந்தமான 04 ஆதனங்களைக் குத்தகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 2,610,552 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,294,096 ஆன நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக வாரச்சந்தை நடாத்தப்படாத கால எல்லைக்குரிய நிலுவைத் தொகை புத்தகங்களிடமிருந்து பதிவழிப்பத்தாக சபைத் தீர்மானங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வாடகை வருமானம் அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 04 நூலகங்களில் 2015-2021 காலப்பகுதியில் வாசிப்போருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 170,411 ஆன 672 நூலகப் புத்தகங்களும் பெறுமதி குறிப்பிடப்படாத 07 புத்தகங்கள் உட்பட 679 புத்தகங்கள் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டோ அல்லது அதற்காக பணம் அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கிடைக்காத 17 புத்தகங்களுக்காக ரூபா 10,973 தொகை அறவிடப்பட்டு அறவிடப்பட்டாகவும் எஞ்சிய புத்தகங்களை பெற்றுக் கொள்வதறகு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | வாசிப்பாளர்க்கு வழங்கப்பட்ட புத்தகங்கள் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |